டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 31.10.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 112 | Madurai | Online Edition

2027-28 ராபி பருவ பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வு

புது தில்லி, அக்.30

விவசாயிகளுக்கு விளைபொருட்களுக்கான விலை உத்தர வாதத்தை அளிப்பதிலும், அவர்களின் வேளாண் முதலீடுகளைப் பாதுகாப்பதிலும் குறைந்தபட்ச ஆதரவு விலை திட்டம் மிக முக்கிய கொள்கை முடிவாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2027-28-ம் ஆண்டின் ராபி சந்தைப் பருவத்திற்கான அனைத்து அத்தியாவசிய பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி வழங்க மத்திய அரசு 30.09.26 அன்று ஒப்புதல் அளித்தது. இதன் மூலம் 324 லட்சம் மெட்ரிக் டன் விளைபொருட்களைக் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு சுமார் ரூ.90,962 கோடி நேரடியாக வழங்கப்பட உள்ளது. 2004-05 முதல் 2013-14 வரையிலான காலகட்டத்தில் ஆறு முக்கிய ராபி பயிர்களின் கொள்முதல் அளவு 2,302 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த நிலையில், 2014-15 முதல் 2025-26 வரையிலான காலகட்டத்தில் இது 3,921 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. அதேபோல், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஆதரவு விலைத்தொகை ரூ.2.65 லட்சம் கோடியிலிருந்து, ரூ.8.36 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

விவசாயச் செலவுகள், விலைகளுக்கான ஆணையத்தின் பரிந் துரைகளின் அடிப்படையில் ஆண்டுதோறும் 22 வகையான பயிர் களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு அறிவித்து வருகிறது. பயிர் சாகுபடிச் செலவு, சந்தை வரத்து, உள்நாட்டு, சர்வதேச சந்தை நிலவரங்கள், விவசாயமல்லாத பிற துறைகளு டனான வர்த்தகச் சமநிலை ஆகிய பல்வேறு காரணிகளை ஆராய்ந்து, சாகுபடிச் செலவை விட குறைந்தபட்சம் 50 சதவீத கூடுதல் லாபம் கிடைக்கும் வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதில் மனித உழைப்பு, கால்நடைகள், இயந்திரங்களுக்கான வாடகை, நிலத்திற்கான குத்தகை, விதைகள், உரங்கள், பாசனச் செலவுகள், உழவு உபகரணங்களின் தேய் மானம், குடும்ப உறுப்பினர்களின் உழைப்பு உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

2027-28 ராபி சந்தைப் பருவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையில், அதிகபட்சமாக குங்குமப்பூவுக்கு குவிண்டாலுக்கு ரூ.675 உயர்த்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கடுகுக்கு ரூ.413, மசூர் பருப்புக்கு ரூ.390, பார்லிக்கு ரூ.136 உயர்த்தப்பட்டுள்ளது. உற்பத்திச் செலவை ஒப்பிடுகையில், கோதுமைக்கு அதிகபட்சமாக 106 சதவீதமும், கடுகுக்கு 96 சதவீதமும், மசூருக்கு 92 சதவீதமும் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு விவசாயிகளுக்கு நியாயமான வருவாயை உறுதி செய்வதுடன், பயிர் சாகுபடியில் பன்முகத்தன்மையை ஊக்குவிக்கவும் உதவும்.

தானியங்கள், சிறுதானியங்களை இந்திய உணவுக் கழகமும், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்களைப் பிரதமரின் விவசாயிகள் வருவாய் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் விலை ஆதரவுத் திட்டத்தின் மூலம் நாஃபெட், தேசிய நுகர்வோர் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு ஆகியவையும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்கின்றன. இடைத்தரகர்களின் தலையீட்டைத் தவிர்த்து வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த இ-சம்ரித்தி, இ-சம்யுக்தி போன்ற பிரத்யேக டிஜிட்டல் தளங்கள் வாயிலாக விவசாயிகள் பதிவு செய்து, வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக குறைந்தபட்ச ஆதரவு விலை செலுத்தப்படுகிறது. கொள்முதல் நடைமுறைகளில், தகுதியான விவசாயிகளை உறுதி செய்ய கைரேகை, கருவிழி உள்ளிட்ட பயோமெட்ரிக் சரிபார்ப்பு நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அறிவியல் ரீதியான பயிர் சாகுபடி முறைகள், அரசின் ஆதரவு, நியாயமான குறைந்தபட்ச ஆதரவு விலை ஆகியவை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் அரசின் உறுதிப்பாட்டுக்கு சான்றுகளாகத் திகழ்கின்றன.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மண்வள மேம்பாடு மற்றும் விளைநிலம் காப்போம் குறித்த விவசாயிகள் பயிற்சி

மதுரை, அக்.30

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டார வேளாண்மைத் துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டம் மூலம் 29.10.26 அன்று பில்லுசேரி கிராமத்தில் மண்வள மேம்பாடு மற்றும் விளைநிலம் காப்போம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் மதுரை கிழக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பாலமுருகன் வரவேற்புரை ஆற்றி தற்போது நடைமுறையில் உள்ள விவசாய அடையாள எண், மின்னணு பயிர் கணக்கீடு மற்றும் துறை சார்ந்த திட்டங்கள் மானிய விபரங்களை விளக்கினார். மண்வள மேலாண்மை குறித்தும் மண்வளத்தை காப்பதின் முக்கியத்துவம் குறித்தும், இயற்கை முறையில் விவசாயம் செய்வதினால் மண்வளத்தினை பாது காக்கலாம் எனவும் ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் கே.மகாராஜன் விளக்கி கூறினார்.

விளைநிலம் காப்போம் திட்டத்தின் முக்கிய நோக்கம் என்பது மண்வளத்தை பாதுகாத்து விவசாயத்தை மேம்படுத்தி நீடித்த நிலையான வேளாண்மையை ஊக்குவிப்பதாகும். ரசாயன உரங்களின் மித மிஞ்சிய பயன்பாட்டால் பாழாகும் விளை நிலங்களை மீட்டெடுத்து நாட்டின் உணவு பாதுகாப்பையும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் உறுதி செய்வது என்று வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கி.சுரேஷ் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆனந்தகுமார் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஜெகன் பாண்டி மற்றும் முகிலா ஆகியோர் செய்திருந்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராம கிருஷ்ணன் நன்றி உரை ஆற்றினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

சிறப்புச்சலுகை

கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

விளைச்சலை மும்மடங்காக்க முளைப்புத்திறன் பரிசோதனை செய்வீர்!

திண்டுக்கல், அக்.30

விதைப்பரிசோதனை செய்து விதைத்தால் அதிக மகசூல் பெறலாம் என திண்டுக்கல் மாவட்ட விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, வேளாண்மை அலுவலர்கள் ப.பிரபாகரன் மற்றும் ம.ஜமுனாராணி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாவது, விதை உற்பத்தி செய்வோர், விற்பனை செய்வோர் மற்றும் விவசாயிகள் அனைவரும் தங்களிடமுள்ள விதைகளின் தரத்தை அறிந்து விதைகளை விதைப்பதால் அதிக மகசூல் பெறலாம். குறைந்த தரம் கொண்ட விதைகளை நடவு செய்வதின் விளைவாக ஏற்படும் இடர்பாடுகளை குறைப்பதே விதைப்பரிசோதனை நிலையங்களின் நோக்கம் ஆகும்.

முளைப்புத்திறன் பரிசோதனையானது விதை முளைப்பிற்கு சாதகமான சூழ்நிலைகளான ஈரப்பதம், தட்பவெப்பநிலை, ஊடகம் மற்றும் ஒளிச்செறிவு போன்றவற்றில் மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பராமரிக்கும் விதைகளின் முளைப்புத் திறனை இயல்பான நாற்றுகள், இயல்பற்ற நாற்றுகள், கடின விதைகள் மற்றும் முளைக்காத விதைகள் என்று வகைபடுத்தப் படுகிறது. இயல்பான நாற்றுகள் என்பவை பயிருக்கு சாதகமான சூழ்நிலைகளான மணல், நீர், தட்பவெப்பநிலை மற்றும் ஒளிச் செறிவில் நன்கு வளரும் நாற்றுக்கள், சாதகமான சூழ்நிலையில் நன்கு வளராமல் வளர்ச்சி குன்றியும்,அழுகியும் காணப்படும் நாற்றுகள் இயல்பற்ற நாற்றுகள் ஆகும். கடின விதைகள் ஆய்வுக் காலம் முடியும் வரை ஈரத்தை உறிஞ்சாமல் கடினமாக காணப்படும்.

முதல் ஆய்வில் முடிவுகள் திருப்பதிகரமாக இல்லாவிடில் அவற்றின் முடிவு வெளியிடப்படாமல் வைத்திருந்து பின்னர் மறு ஆய்வு செய்யப்பட்டு இறுதி முடிவு அறிவிக்கப்படும். முடிவானது 100 விதைகளுக்கு எத்தனை விதைகள் இயல்பான, இயல்பற்ற, கடின மற்றும் முளைக்காத விதைகள் என அறிவிக்கப்படும்.

எனவே திண்டுக்கல் மாவட்ட விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் வசம் உள்ள

விதைகளில் 100 கிராம் அளவு விதையினை திண்டுக்கல் உழவர் மைய வளாகத்தில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் பயிர் இரகம், முழு முகவரியுடன், ஒரு விதை மாதிரி ஒன்றிற்கு ரூ.80/- மட்டும் பரிசோதனை கட்டணமாக செலுத்தி பரிசோதிக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

நானோ விழிப்புணர்வுக் கருத்தரங்கம்

கோயம்புத்தூர், அக்.30

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டாரம், கோட்டூர் மலையாண்டிபட்டினம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் (PACCS) விவசாயிகள் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் விவேகானந்தன் தலைமை தாங்கினார். இதில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், இப்கோ கள அலுவலர் சரவணன், இப்கோ நானோ உரங்களான நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி., உயிர் உரங்கள் மற்றும் சாகரிகா திரவ உரம் ஆகியவற்றின் நன்மைகள், பயன்பாட்டு முறைகள் மற்றும் பரிந்துரைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். மேலும், காய்கறிப் பயிர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் இப்கோ நானோ யூரியா மற்றும் நானோ டி.ஏ.பி. உரங்களின் முக்கியத்துவம் குறித்தும், தென்னை சாகுபடியில் சாகரிகா மற்றும் வேப்பம் புண்ணாக்கைப் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. நானோ உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் செலவுக் குறைப்பு மற்றும் ஊட்டச்சத்துப் பயன்பாட்டுத் திறன் மேம்பாடு உள்ளிட்ட நன்மைகளும் விளக்கப்பட்டன. தொடர்ந்து, சங்கட் ஹரன் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குக் கிடைக்கும் காப்பீட்டுப் பலன்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இயற்கை வேளாண்மை செய்யும் விவசாயிகளுக்கு உழவர் சந்தையில் கடைகள் ஒதுக்கீடு!

திருப்பூர், அக்.30

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டும் நுகர்வோர்களுக்கு நஞ்சில்லா காய்கறிகள் மற்றும் பழங்கள் வழங்கும் பொருட்டும் தமிழக அரசு இயற்கை வேளாண்மை செய்யும் (organic farmers) விவசாயிகளுக்கு உழவர் சந்தை களில் கடைகள் ஒதுக்கீடு செய்து இயற்கை விளைபொருட்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இயற்கை வேளாண் சந்தையானது வரும் 01.11.26 ஞாயிற்றுகிழமை அன்று ஒவ்வொரு உழவர் சந்தைகளிலும் தொடங்கப்பட உள்ளது. அதனை தொடர்ந்து பிரதி வாரம் ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும் நடைபெறும். அதனால் இயற்கை வேளாண்மை செய்யும் விவசாயிகள் தங்களது இயற்கை விளை பொருட்களை கொண்டுவந்து அருகில் உள்ள உழவர் சந்தைகளில் விற்பனை செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இயற்கை வேளாண் வேளாண்மை சந்தையானது காலை உழவர் சந்தை செயல்படும் நேரத்தில் (4.00 am to 12.00 pm) செயல்படும். இயற்கை வேளாண்மை செய்யும் விவசாயிகள் விதை சான்று மற்றும் உயிர்மச்சான்றளிப்புத்துறை வழங்கும் இயற்கை விவசாயிகளுக்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் (Scope certificate).

விருப்பமுள்ள விவசாயிகள் அருகில் உள்ள உழவர் சந்தைகளில் விண்ணப்பித்து அடையாள அட்டை பெற்றுக் கொள்ள வேண்டும் என திருப்பூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (பொ) (வேளாண் வணிகம்) தெரிவித்துள்ளார்.

தொடர்புக்கு : ***திருப்பூர் வடக்கு மற்றும் பல்லடம் – 94451 84463, திருப்பூர் தெற்கு – 98653 95578, தாராபுரம் மற்றும் காங்கேயம் – 82204 89391, உடுமலைப்பேட்டை – 79048 47107.***

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)	ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)	ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)	ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)	ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

ஒருங்கிணைந்த காட்டுப்பன்றி மேலாண்மை வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்!

விருதுநகர், அக்.30

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரத்தில் தற்பொழுது நெல் மக்காச்சோளம், பயறு நிலக்கடலை, சூரியகாந்தி, கரும்பு மற்றும் பருத்தி பயிர்கள் சாகுபடி நடைபெற்று வருகிறது காட்டுப் பன்றியானது அனைத்து பயிர்களையும் சேதப்படுத்துவதாக விவசாயிகளிடமிருந்து புகார் தொடர்ந்து பெறப்பட்டு வருகிறது. விளைநிலங்களில் காட்டுப் பன்றிகளை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தும் மேலாண்மை முறைகள் குறித்து திருச்சுழி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

காட்டுப்பன்றிகள் இரவு நேரங்களில் விளைநிலங்களுக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்துகின்றன. மக்காச்சோளம் நிலக்கடலை நெல் கரும்பு மற்றும் இதர பயிர்களை வேரோடு கிளறி மிதித்து உண்டு சேதப்படுத்துவதால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. காட்டுப்பன்றிகளை கட்டுபடுத்துவதற்கு விளை நிலத்தைச் சுற்றிலும் வேலி அமைக்க வேண்டும். நிலத்தைச் சுற்றி சுள்ளி போன்ற முட்கள் நிறைந்த தாவரங்களை நடவு செய்து உயிர்வேலி அமைக்கலாம். காட்டுப் பன்றிகளை விரட்டுவதற்காக விவசாயிகள் பட்டாசுகளை வெடித்தல் உள்ளூர் மேளங்கள் காலி டின்கள் போன்றவற்றைக் கொண்டு சத்தம் எழுப்புதல் தீ மூட்டுதல் மற்றும் கூச்சல் இடுதல் போன்ற முறைகளை ஒருங்கிணைந்து சமூக அடிப்படையில் மேற் கொள்ள வேண்டும். காட்டுப்பன்றிகள் அதிகமாக காணப்படும் பகுதிகளில் உள்ளூர் நாய்களை சமூக அடிப்படையில் பயன்படுத்தி விரட்டலாம்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வாசனை மூலம் காட்டுப்பன்றிகளை விரட்டும் TNAU- காட்டுப்பன்றி உயிர் விரட்டியை உருவாக்கியுள்ளது. வயல் சுற்றிலும் 2.5 அடி உயரமுள்ள மர குச்சிகளை 10 அடி இடைவெளியில் நட்டு வேலி அமைத்து ஒவ்வொரு மரக் குச்சியிலும் 1.5 அடி உயரத்தில் கயிறு கட்ட வேண்டும். ஒரு ஏக்கருக்கு இரண்டு சென்டிமீட்டர் விட்டம் உள்ள நூறு சிறிய பிளாஸ்டிக் கொள்கலன்கள் தேவைப்படும்.

ஒவ்வொரு கொள்கலனிலும் நான்கு சிறிய துளைகள் இட்டு தடிமனான நூலால் அவற்றை கயிற்றில் கட்ட வேண்டும். ஒவ்வொரு கொள்கலனிலும் 5 மிலி அளவு உயிர் விரட்டியை ஊற்ற வேண்டும். ஒரு ஏக்கருக்கு மொத்தம் 500 மிலி உயிர் விரட்டி தேவைப்படும். தொடர்ச்சியான செயல்திறனை உறுதி செய்ய பொருள் கலன்களில் உள்ள TNAU – காட்டுப்பன்றி உயிர் விரட்டி திரவத்தை 20 நாட்களுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும். சீமை கருவேல மரங்கள் அடர்ந்து உள்ள இடங் களை காட்டு பன்றிகள் தங்கள் வாழ்விடமாகக் கொண்டு அருகில் உள்ள விளைநிலங்களில் பயிர்களை சேதப்படுத்து கின்றன.

தமிழ்நாட்டில் காட்டு பன்றிகளால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு ஏற்படும் சேதம் அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. காட்டு பன்றிகள் விவசாயிகள் விளைவிக்கும் பயிர்களை உண்பதால் ஏற்படும் சேதத்தோடு, பாசன குழாய்களை உடைத்தல், பயிர்களை மிதித்து சேதப் படுத்துதல் வேலிகளை சேதப்படுத்துதல் மற்றும் இளம் தென்னங்கன்றுகளை அளித்தல் போன்ற செயல்களால் விவசாயிகளுக்கு கூடுதல் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. காட்டு பன்றிகளால் ஏற்படும் பயிர் சேதத்தை தடுப்பதற்காக விவசாயிகள் பல்வேறு பாரம்பரிய முறைகளை பின்பற்றி வந்தாலும் அவை நீடித்த அறிவியல் அடிப்படையிலான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வாக அமையவில்லை.

எனவே தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் உருவாக்கி உள்ள சுற்றுச்சூழலுக்கும் பிற உயிரினங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத உயிரியல் அடிப்படையிலான TNAU – திரவ காட்டுப்பன்றி விரட்டியை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்து காட்டு பன்றிகளால் ஏற்படும் பயிர் சேதத்தை குறைத்து விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் TNAU–திரவ காட்டுப்பன்றி உயிர் விரட்டியை உருவாக்கி உள்ளது. TNAU காட்டுப்பன்றி உயிர் விரட்டியை பயன்படுத்துவதால் காட்டு பன்றிகளால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு ஏற்படும் சேதம் கணிசமாக குறையும். காட்டு பன்றிகளால் ஏற்படும் பயிர் சேதம் குறைவதன் மூலம் வேளாண் உற்பத்தி திறன் அதிகரித்து விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் என திருச்சுழி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ம.காயத்ரிதேவி தெரிவித்துள்ளார்.

உயிர்ம விவசாயிகள் கட்டணமின்றி உயிர்மச்சான்று பெறுவீர்!

திருநெல்வேலி, அக்.30

தமிழக அரசு 2026-2027ம் ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட்டில் உயிர்ம விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையிலும் உயிர்ம விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் உயிர்மச் சான்று பெறுவதற்கான கட்டணத்தை ரத்து செய்து கட்டணமின்றி பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உயிர்ம வேளாண்மையில் ஈடுபட்டு இதுவரை உயிர்மச்சான்று பெறாத விவசாயிகள் தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு பதிவு செய்து கட்டணமின்றி உயிர்மச்சான்று பெற்றுக் கொள்ளலாம். இதற்காக விவசாயிகள் அவர்களுடைய போட்டோ, ஆதார், பான் கார்டு ஆகியவற்றின் நகல்கள் சிட்டா நகல், நில வரைபடம், நீர் மற்றும் மண் மாதிரி ஆய்வு முடிவுகள் கொண்டு விண்ணப்பிக்கலாம். இத்திட்டத்தின் கீழ் உயிர்மச்சான்று பெற்ற பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யலாம்.

எனவே, திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் அனைவரும் இந் நல்வாய்ப்பினை பயன்படுத்தி தங்களது உயிர்ம பண்ணைகளை பதிவு செய்யுமாறு திருநெல்வேலி மாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குனர் ஐ.கலைச்செல்வி தெரிவித்து உள்ளார்.

மண் மற்றும் நீர் வேளாண்மை பயிற்சி

திருப்பூர், அக்.30

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் வட்டாரத்தில், பாசன நீர் மேலாண்மை நிலையத்தில் விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சியாக மண் மற்றும் நீர் வேளாண்மை பயிற்சி நடைபெற்றது. பயிற்சியில் நீர் மேலாண்மை நிலையத்தின் உதவி செயற் பொறியாளர் கிரிஸ்டல் கோரட் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பொங்கலூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஒருங்கிணைப்பாளர் கண்ணன் தலைமை உரை ஆற்றினார். மண் மற்றும் நீர் வேளாண்மை குறித்து உடுமலைப்பேட்டை வேளாண்மை பொறியாளர் T.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, மைக்ரோகீரின் குறித்து சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார்.

விவசாயிகள் 40க்கும் மேற்பட்டவர் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை இயக்குனர் கவிதா சிறப்புரை நடத்தினார் மற்றும் விவசாயிகள் கேள்வி பதிலுக்கு நேரம் ஒதுக்கப்பட்டு பதில் கூறப்பட்டது. மதிய உணவு வழங்கப்பட்டது மற்றும் மண் வேதியியல் துறை உதவி பேராசிரியர் பாரதி மண் வேதியியல் பற்றி கூறினார்.

தோட்டக்கலை பயிர்களுக்கு மானியம் எவ்வளவு தெரியுமா?

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் தரமான விளைப் பொருட்களை உற்பத்தி செய்யவும், நீடித்த நிலையான மற்றும் லாபகரமான வேளாண்மையை ஊக்குவிக்கவும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாக நடப்பாண்டிற்கான (2026-27) மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் வாயிலாக பல்வேறு தோட்டக்கலை பயிர்கள் மற்றும் வேளாண் சார்ந்த செயல் பாடுகளுக்கு தகுதியுள்ள விவசாயிகளுக்கு மானியம் வழங்கப் படுகிறது. அதன் விபரங்களை தெரிந்து கொள்ளுவோம்.

1) பாரம்பரிய காய்கறி ரகங்களை பயிரிட ஹெக்டேருக்கு 24000 மானியம்

2) தர்ப்பூசணி விதைக்கு 40% மானியம்

3) தென்னை சாகுபடிக்கு 14000 (50%) மானியம் வழங்க படுகிறது

4) மாடித்தோட்ட தளைகளுக்கு 725 (50%மானியம்)

5) செங்குத்து தோட்டத்திற்கு 15000(50% மானியம்

6) காய்கறி தளைக்கு ரூ45(75%) மானியம்

7) தென்னந்தோப்பில் வாழை ஊடுபயிராக சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு 10000மானியம்

8) புளி சாகுபடிக்கு 10000 மானியம்/ ஹெக்டேர்

9) ரோஜாவுக்கு 20,000 மானியம்/ ஹெக்டேர்

10) மற்ற செடிகளுக்கு 40% மானியம் வழங்கப்படுகிறது.

11) பனங்கொட்டை (விதை) எண்ணிக்கை ஒன்றுக்கு ரூ.3 மானியம்

12) பனங்கன்றுக்கு 100% மானியம்

13) புதியதாக நடவு செய்யப்பட்ட தென்னையில் காய்கறி மற்றும் சுவை தாளித பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு 10000மானியம் வழங்கப்படுகிறது.

14) நிரந்தர மண்புழு உர உற்பத்தி களம் அமைக்க 50,000 விதம் 50% மானியம்.

15) நீரில் கரையக்கூடிய உரங்கள் வழங்கும் இனத்தில் ஹெக்டேருக்கு 10000 வரை 75%மானியம் வழங்கப்படுகிறது.

எனவே விவசாயிகள் தங்களுக்கு தேவையான திட்டங்களை தேர்வு செய்து உரிய ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட தோட்டக் கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு, வாங்கி பயன் பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

என்ன இவ்வளவு திட்டங்களா? தோட்டக்கலைதுறையில் இருக்கா? என நீங்கள் கூறுவது காதில் கேட்கிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்

முறையாக தலைக் கவசம் அணிவோம்

திருந்திய நெல் சாகுபடி குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு செயல்விளக்கப் பயிற்சி

பெரம்பலூர், அக்.30

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், சிறுவயலூர் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவிகள் வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜெ.செ.ஹலீமா ஜான், செ.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வெ.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் துணைப்பிரிவாக, மாணவிகள் மாவிலங்கை கிராம விவசாயிகளுக்கு திருந்திய நெல் சகுபடியின் பயன்பாடு, அதை பயன்படுத்தும் முறை மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளித்தனர். திருந்திய நெல் சாகுபடி (ஸ்ரீதீவிமிளது லிக்ஷ் யூஷ்உள ஞூஜமிளஜவிஷ்க்ஷஷ்உழிமிஷ்லிஜ – றீயூஞூ) என்பது குறைந்த நீர் மற்றும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறும் ஒரு நவீன நெல் விவசாய முறையாகும்.

இம்முறையில் பாரம்பரிய முறையை விடக் குறைவாக, அதாவது 10 முதல் 12 நாட்கள் ஆன இளம் நாற்றுகள் மட்டுமே நடவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. நாற்றுகளை நெருக்கமாக நடாமல், 25-க்கு 25 சென்டிமீட்டர் (25x25 cm) இடைவெளியில் சதுர வடிவில் வரிசையாக நடுவதால், பயிர்களுக்குப் போதிய சூரிய வெளிச்சமும் காற்றோட்டமும் கிடைத்து தூர்கள் அதிகமாக வெடிக்கின்றன. இதில் வயலில் எப்போதும் தண்ணீரைத் தேக்கி வைக்காமல், மண் நனையும் அளவிற்கு மட்டும் காய்ச்சலும் பாய்ச்சலுமாக நீர் மேலாண்மை செய்யப்படுகிறது. மேலும், களைகளைக் கட்டுப்படுத்த 'கோனோ வீடர்' (Cono Weeder) கருவி பயன்படுத்தப்பட்டு, அந்தக் களைகளையே மண்ணுக்கு உரமாக்கப்படுகின்றன.

இதனால், குறைந்த விதை, குறைந்த நீர், குறைந்த உழைப்பு ஆகியவற்றின் மூலம் இரட்டிப்பு லாபம் தரும் ஒரு மிகச்சிறந்த விவசாய நுட்பமே திருந்திய நெல் சாகுபடியாகும். இறுதியாக, இப்பயிற்சி குறித்த சந்தேகங்களை விவசாயிகள் மாணவிகளிடம் கேட்டு தெளிவாக அறிந்து பயன் பெற்றனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021

IS 9537

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)	ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)	ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)	ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)	ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW. isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

உழவர் விவாதக் குழு பயிற்சி கூட்டம்

சேலம், அக்.30

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வேளாண்மை உழவர் நலத்துறை உழவர் விவாதக் குழு பயிற்சி கூட்டம் உலிபுரம் கிராமத்தில் நடைபெற்றது. வட்டார தொழில் நுட்ப மேலாளர் அற்புத வேலன் வரவேற்றார். துணை வேளாண்மை அலுவலர் கே.சி ரவி இயற்கை விவசாயத்தின் நன்மைகள் மற்றும் நடப்பு துறை சார்ந்த திட்டங் களை எடுத்துரைத்தார். சிறப்பு பயிற்சியாளர் சேலம் வேளாண் உழவர் பயற்சி நிலைய வேளாண்மை அலுவலர் தனசேகர் கலந்து கொண்டு, நடமாடும் மண்பரிசோதனை நிலையம், பாரம்பரிய நெல் ரகம் பயிரிடும் முறைகள், நன்மைகள், பயிர் விளைச்சல் போட்டி மற்றும் விவசாய அடையாள எண் அவசியத்தை எடுத்து கூறினார். தம்மம்பட்டி வனசரக வனவர் பெரியசாமி, வன காப்பாளர் வினோத் குமார், உலிபுரம் உதவி தோட்டகலை அலுவர் கோபால் மற்றும் வேளாண் விற்பனை வணிகம் உதவி வேளாண்மை அலுவர் சுரேஷ் ஆகியோர் துறைசார்ந்த திட்டங்களை எடுத்து கூறினார். நிகழ்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கர், பிரபா, முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் வேளாண் மாணவர்கள் களப்பயணம்

சேலம், அக்.30

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், இனாம் பைரோஜி பகுதியில் செயல்பட்டு வரும் வீரபாண்டி களஞ்சிய ஜீவிதம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வாழவச்சனூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சந்தியூர் குழுவைச் சார்ந்த 25 மாணவர்கள், கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் 29.10.26 அன்று களப்பயணம் மேற்கொண்டனர்.

நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் சிவராணி மற்றும் இயக்குநர் பூங்கொடி ஆகியோர் மாணவர்களுக்கு நிறுவனத்தின் செயல்பாடுகள், வேளாண் விளைபொருட்களின் மதிப்புக்கூட்டல், மரச்செக்கு எண்ணெய் தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் குறித்து விளக்கினர். இக்களப்பயணத்தின் மூலம் மாணவர்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகள் & வேளாண் தொழில் முனைவோர் வாய்ப்புகள் குறித்த நடைமுறை அறிவைப் பெற்றனர்.

வேளாண் நடைமுறைகளை அறிந்து கொண்ட வேளாண் கல்லூரி மாணவிகள்

திருச்சி, அக்.30

திருச்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் அஃப்ரீன் பானு M, ஆர்த்தி R, அபர்ணாதேவி P, அபிநயா A, அக்ஷயா S K, அமராவதி M, அனுபா ஸ்ரீ R, அர்பனாமார் சினாம், ஆர்த்தி K, அதிசயாபேபி A, தீப்திலதாசாஹு, ஏக்தா ஆனந் ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் (RAWE) கீழ் குமுளூர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்திற்கு வருகை தந்துள்ளனர்.

பயிற்சி திருச்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் முனைவர்கள் சாந்தி, திருவுடை நம்பி மற்றும் பெரிலிசின்னவாணி ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெறுகிறது. தொடர்ந்து இதன் ஒரு பகுதியாக, மாணவிகள் 26.10.26 அன்று லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு சென்றனர். அங்கு வேளாண்மை உதவி இயக்குநர் சத்யபிரியா மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிசெல்வன் ஆகியோரைச் சந்தித்து அந்த வட்டாரத்தில் பின் பற்றப்படும் வேளாண் நடைமுறைகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தனர். குறிப்பாக, அப்பகுதியில் பின்பற்றப்படும் பயிர் சாகுபடி முறைகள், பயிரிடப்படும் பயிர் வகைகள், சாகுபடிக்காகப் பயன் படுத்தப்படும் ரகங்கள் மற்றும் விவசாயிகளுக்காகச் செயல்படுத்தப் படும் அரசு வேளாண் திட்டங்கள் குறித்து விளக்கங்களைப் பெற்றனர். மாணவிகளை வரவேற்று, பயிற்சிக் காலம் முழுவதும் தேவையான வழிகாட்டுதலையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக உறுதியளித்தனர். இச்சந்திப்பு, மாணவிகள் கள அனுபவத்தின் மூலம் வேளாண்மை விரிவாக்கப் பணிகள் மற்றும் உள்ளூர் வேளாண் நிர்வாகம் குறித்த நடைமுறை அறிவை பெறுவதற்கான சிறந்த தொடக்கமாக அமைந்தது.

கால்நடை மருத்துவ முகாம் நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

சேலம், அக்.30

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டாரம், மன்னார்ப்பாளையதில் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவசன் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் தேவரூபன், தாணு, தரணி தரன், தரணிஷ், திராவிட், கோகுல், குருலிங்கம், ஹரிநாத், ஆகியோர் உதவி இயக்குநர் (ADA) கண்ணன் மற்றும் வேளாண்மை அலுவலர் (AO) பசுபதி உதவியுடன் கால்நடை மருத்துவ முகாம் நடத்தினர்

இந்நிகழ்ச்சியில் மேலும் சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (JDA) கே. ஸ்ரீனிவாசன், துணை இயக்குநர் (DDA) அருணா, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதில் ஐம்பதிற்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கு அரசின் பல்வேறு வேளாண் நலத்திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. குறிப்பாக, பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி (PM-KISAN) திட்டம், சொட்டுநீர்ப் பாசனத் திட்டம் (PMKSY) மற்றும் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) ஆகியவற்றின் பயன்கள் மற்றும் அவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகள் எடுத்துரைக்கப்பட்டன.

மேலும், வறட்சியைத் தாங்கும் பயிர் மேலாண்மை முறைகள், நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் கைப்பேசி வாயிலாக வேளாண் விளைபொருட்களைச் சந்தைப்படுத்தும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பெண் விவசாயிகளின் திறனை மேம்படுத்தவும், அரசின் பல்வேறு வேளாண் திட்டங்களைப் பயன்படுத்தி உற்பத்தி மற்றும் வருமானத்தை அதிகரிக்கவும் இந்நிகழ்ச்சி பயனுள்ளதாக அமைந்தது. இதன் ஒரு பகுதியாக, கால்நடை மருத்துவ முகாமும் நடத்தப்பட்டது. இம்முகாமில் கால்நடை மருத்துவர் டாக்டர் கோகுலா கலந்து கொண்டு, கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து மருந்து செலுத்தினார். மேலும், கால்நடைகளைத் தாக்கும் பல்வேறு நோய்கள், அவற்றின் அறிகுறிகள், நோய்த் தடுப்பு முறைகள் மற்றும் கால்நடைகளைப் பராமரிக்கும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

மகேந்திரவாடி கிராமத்தில் வேளாண் செயல்விளக்க நிகழ்ச்சி!

ராணிப்பேட்டை, அக்.30

சாயாத்தோட்டம் டான் போஸ்கோ வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள், ராணிப்பேட்டை மாவட்டம், மகேந்திரவாடி கிராமத்தில் 29.10.26 அன்று விவசாயிகளுக்கான வேளாண் செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் பயிர்ச் சுழற்சி, பசுந்தாள் உரம், பசுந்தழை உரம் மற்றும் உழவன் செயலி ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் முகிலன் ஆகியோர் பங்கேற்றனர்.

பயிர்ச் சுழற்சி குறித்த செயல்விளக்கமளித்த மாணவியான அபிநயா.ஆ, பயிர்ச் சுழற்சியின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். ஒரே நிலத்தில் வெவ்வேறு பருவங்களில் வெவ்வேறு பயிர்களைத் திட்டமிட்டு மாற்றி மாற்றிச் சாகுபடி செய்வதே பயிர்ச் சுழற்சி எனப்படுகிறது. இம்முறை மண்ணில் உள்ள ஊட்டச்சத்துகளைச் சீராகப் பயன்படுத்தவும், மண்ணின் வளத்தைப் பாதுகாக்கவும் உதவுகிறது. மேலும், பயறு வகைப் பயிர்களைப் பயிர்ச் சுழற்சியில் சேர்ப்பதன் மூலம் மண்ணில் தழைச்சத்தின் அளவை அதிகரிக்க உதவுவதுடன், பூச்சி மற்றும் நோய்களின் தாக்கத்தையும் குறைக்க முடியும் என்பதை எடுத்துரைத்தார்.

பசுந்தாள் உரம் மற்றும் பசுந்தழை உரம் குறித்த செயல் விளக்கமளித்த மாணவி டெலிசா. டே, பசுந்தாள் உரம் மற்றும் பசுந்தழை உரத்தின் முக்கியத்துவம், தயாரிக்கும் முறைகள் மற்றும் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

சணப்பை, தக்கைப்பூண்டு போன்ற பசுந்தாள் உரப் பயிர்களை வயலில் வளர்த்து, அவற்றை இளம் பருவத்தில் மண்ணில் மடக்கி உழுவதன் மூலம் மண்ணின் வளத்தை மேம்படுத்தலாம் என்று விளக்கினார். இம்முறையால் மண்ணில் கரிமப் பொருட்கள் அதிகரித்து, மண்ணின் கட்டமைப்பும் ஊட்டச்சத்துகளைத் தக்க வைக்கும் திறனும் மேம்படுகின்றன.

மேலும், பசுந்தழை உரம் தயாரிப்பதற்காக புங்கை, கிளிரிசிடியா போன்ற மரங்களின் பச்சை இலைகள் மற்றும் தழைகளைச் சேகரித்து வயலில் இடும் முறையையும் எடுத்துரைத்தார். இவ்வாறு இயற்கையாகக் கிடைக்கும் தாவரப் பொருட்களை உரமாகப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் வளத்தைப் பாதுகாக்கவும், உரச் செலவைக் குறைக்கவும் முடியும் என்பதை விளக்கினார்.

உழவன் செயலி குறித்த செயல்விளக்கமளித்த மாணவி தர்ஷினி. பா, தமிழ்நாடு அரசின் உழவன் செயலியின் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். கைப்பேசியில் உழவன் செயலியைப் பயன்படுத்தும் முறை மற்றும் அதன் மூலம் பெறக்கூடிய வேளாண்மைத் தகவல்கள் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும், அரசு வேளாண் திட்டங்கள், மானிய விவரங்கள், வேளாண் இடுபொருட்கள் தொடர்பான சேவைகள் மற்றும் பிற வேளாண்மை சார்ந்த தகவல்களைச் செயலியின் மூலம் அறிந்து கொள்ளும் முறைகளையும் விளக்கினார். இதன் மூலம் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண்மைத் தகவல் களை எளிதாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் டான் போஸ்கோ வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் அபிநயா.ஆ, அகல்யா. சா, ஏஞ்சலின் அனுராதா.ஸ், ஆர்த்தி.அ, கிளான்சி லிவ்யா.ரா, டினா.ஆ, டெலி சா.டே, தர்ஷினி.பா, தர்ஷினி.சி, துர்காதேவி.து பங்கேற்றனர்.

ஆலங்காயம் வனச்சரக அலுவலகத்திற்கு வேளாண் கல்லூரி மாணவர்கள் களப்பயணம்!

திருப்பத்தூர், அக்.30

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் வேளாண் மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, அக்டோபர் 28 அன்று திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் வனச்சரக அலுவலகத்திற்கு களப்பயணம் மேற்கொண்டனர். இந்தப் பயணத்தின் போது, மாணவர்கள் ஆலங் காயம் வனச்சரக அலுவலர் சேகரை சந்தித்து, வனத்துறையின் செயல்பாடுகள் மற்றும் வன வளங்களைப் பாதுகாப்பது குறித்து விளக்கங்களைப் பெற்றனர். மேலும், வனங்களின் முக்கியத்துவம், வனவிலங்குகள் பாதுகாப்பு, மரம் வளர்ப்பு, வனத் தீ தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரித்தல் குறித்து அறிந்து கொண்டனர். இக்களப்பயணம் மாணவர்களுக்கு வனவளப் பாதுகாப்பு, இயற்கை வள மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த நடைமுறை அறிவை வழங்கியது. இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் வனத்துறையின் பங்கைப் புரிந்துகொள்ளவும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்த்துக் கொள்ளவும் இப்பயணம் பயனுள்ளதாக அமைந்தது.

மக்காச்சோளப் பயிரில் படைப்புழுவைக் கட்டுப்படுத்த Metarhizium anisopliae பயன்படுத்தும் செயல்விளக்கப் பயிற்சி

திருச்சி, அக்.30

திருச்சி மாவட்டம், மண்ணணச்ச நல்லூர் ஒன்றியம், பூனாம் பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறை எழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாக கரியமாணிக்கம் கிராம விவசாயிகளுக்கு, மக்காச்சோளப் பயிரில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் படைப் புழுவைக் கட்டுப்படுத்தும் நோக்கில், Metarhizium anisopliae என்ற உயிரியல் பூஞ்சாணத்தைப் பயன்படுத்துவது குறித்து செயல் விளக்கப் பயிற்சி வேளாண் மாணவிகளால் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் படைப்புழுவின் தாக்குதல் அறிகுறிகள், அதன் சேதம் மற்றும் உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து விளக்கப்பட்டது. குறிப்பாக, Metarhizium anisopliae என்ற நன்மை தரும் பூஞ்சாணம் படைப்புழுக்களைத் தாக்கி அவற்றைக் கட்டுப்படுத்த உதவுகிறது. மேலும், இந்த உயிரியல் கட்டுப்பாட்டு முறையைச் சரியான நேரத்தில் பயன்படுத்துவது, பயிர்களைத் தொடர்ந்து கண்காணிப்பது மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைக் கடைப்பிடிப்பது குறித்து விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்தச் செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகள் உயிரியல் பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைப் பற்றிய அறிவைப் பெற்றனர். இதனால், மக்காச்சோளப் பயிரில் படைப்புழுவால் ஏற்படும் சேதத்தைக் குறைத்து, பயிர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான விழிப்புணர்வு வேளாண் மாணவிகளால் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக்கழகத்தின் பரிந்துரைகளிலும் மக்காச்சோளப் படைப்புழு மேலாண்மையில் Metarhizium anisopliae பயன் படுத்துவது இடம்பெற்றுள்ளது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

கால்நடை வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்களின் பங்கு

கறவை மாடு வளர்ப்பில் நவீன தொழில் நுட்பங்களை பயன் படுத்துவது மிகவும் அவசியமான ஒன்றாகும். கறவை மாடு வளர்ப்பில் இலாபம் பெற தீவனச் செலவைக் குறைப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அதே சமயம் சத்துள்ள சமச்சீரான தீவனத்தை சேர்த்து கொடுப்பதன் மூலம் தீவனச் செலவை ஓரளவு குறைக்க முடியும்.

1. கறவை மாடு வளர்ப்பில் தாது உப்புக்கலவையின் பங்கு

கால்நடைகளின் உடல் வளர்ச்சி, கருத்தரிப்பு பராமரிப்பு மற்றும் உற்பத்தி இவற்றில் தாது உப்புகள் பெரும் பங்கு வகிக்கின்றன. தாது உப்புக்கள் எனப்படும் அங்ககப் பொருட்கள் கால்நடைகளின் தீவனத்தில் இல்லாவிட்டாலோ அல்லது அளவு குறைந்து காணப் பட்டாலோ உடலில் குறைப்பாட்டு அறிகுறிகள் உண்டாகும். இத்தகைய குறைபாடுகளைத், தக்க தருணத்தில் தாது உப்புக்களைத் தீவனத்தில் சேக்ஷிப்பதன் மூலம் நீக்கலாம்.

2. கறவை மாடு வளர்ப்பில் அசோலாவின் பங்கு

அசோலா பெரணி வகையைச் சார்ந்த நீரில் மிதக்கும் தாவரம். இத்தாவரம் மிகமிகச் சிறிய இலைகளையும் துல்லியமான வேர்களையும் கொண்டது. அசோலா, சால்வீனியா குடும்பத்தைச் சார்ந்தது. இதனை மூக்குத்திச் செடி அல்லது கம்மல் செடி என்றும் அழைப்பர்.

அசோலாவில் இருக்கும் தழைச்சத்தும் மற்ற சத்துக்களும்

வ.எண்	சத்துக்கள்	சதவீதம்
1.	தழைச்சத்து	1.96 - 5.30
2.	மணிச்சத்து	0.16 - 1.59
3.	சாம்பல் சத்து	0.31 - 5.90
4.	சுண்ணாம்புச் சத்து	0.45 - 1.70
5.	கந்தக சத்து	0.22 - 0.73
6.	மக்னீசியம் சத்து	0.22 - 0.66
7.	இரும்புச் சத்து	0.04 - 0.5
8.	புரதச்சத்து	25 - 35
9.	தாதுக்கள	10 - 2

அசோலாவின் சிறப்பியல்புகள்

அசோலவை மாட்டுத்தீவனமாக பச்சையாகவோ அல்லது பதப்படுத்தியோ பயன்படுத்தலாம். அசோலாவை உணவு உப்புடன் சேர்த்து பன்றிகளுக்கு அளித்தால் பன்றியின் எடை கூடுவதுடன் இறைச்சி தன்மையும் நன்றாக இருக்கிறது. கால்நடைகளுக்கு அசோலாவை அடர் தீவனம் சேர்த்து அளித்ததில் கால்நடைகளின் எடையும் வளர்ச்சியும் அதிகரிப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. கோழிக்குஞ்சுகளுக்கு தீவனத்தில் அசோலாவை 20 சதவீதம் சேர்த்தால் குஞ்சுள் நன்கு வளர்ந்து நல்ல எடையுடன் விளங்குவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. முயல்களும் அசோலாவை விரும்பி உண்கின்றன. அசோலா உற்பத்தி செய்யும் இடங்களில் கொசுத் தொல்லை இருக்காது.

3. ஹைட்ரோபோனிக்ஸ் பசுந்தீவன வளர்ப்பு தொழில்நுட்பம்

'ஹைட்ரோபோனிக்ஸ்' என்பது மண்ணில்லாமல் விவசாயம் செய்யும் முறையே ஆகும். கிராமங்களில் நமது முன்னோர்கள் திருவிழா சமயங்களில் பயன்படுத்திய முளைப்பாரி தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் ஹைட்ரோபோனிக்ஸ் முளைக்கட்டிய விதைகளை பிளாஸ்டிக் தட்டுகளில் கொட்டி, அதிக வெளிச்சம் படாதவாறு வைத்து தண்ணீர் தெளித்து வந்தால் அந்த விதைகள் முளைக்கும். எட்டு நாட்களில் நாற்றுகளாக இருக்கும் நிலையில் அதை எடுத்து தீவனமாக பயன்படுத்தலாம்.

4. உலர் புல் தயாரித்தல் (Hay Making)

மழைக்காலங்களில் அதிகமாக உற்பத்தி செய்த புற்களை சேமித்து வைக்கும் முறையில் எளிமையான முறை ஆகும். உலர்புல் பசுந்தீவனத்தை அதன் சத்துக்கள் குறையாது, சரியான தருணத்தில் அறுவடை செய்து நிழலில் உலர்த்தி, உலர் (10-15 விழுக்காடு) தீவனமாக்கி, பதப்படுத்தி போர் அமைத்து சேமித்தலை உலர்புல் தயாரித்தல் என்று கூறலாம். தீவனப் புற்களை உலர்படுத்தி முறையாகப் பாதுகாப்பதன் மூலம் ஆண்டு முழுவதும் தரமான புற்களைத் தீவனமாக அளிக்க முடியும்.

5. ஊறுகாய் புல்

பசுந்தீவனங்களை அவற்றின் இயற்கைத் தன்மையை இழக்காமல், மிகவும் குறைந்த ஊட்டச்சத்து இழப்புடன் காற்று புகாமல் மூடிப் பதப்படுத்தி 21 நாட்கள் கழித்து பயன்படுத்தும் முறையே ஊறுகாய்புல் ஆகும். ஒரு முறை ஊறுகாய்ப்புல் குழியையோ, பாலித்தீன் பகளையோ திறந்து விட்டால், 30 நாட்களுக்குள் உபயோகப்படுத்திவிட வேண்டும். இவ்வாறு தயாரித்த உறுகாய் புற்களை கறவை பசு, எருதுக்கு 15 முதல் 20 கிலோவும், கிடேரிக்கு

5 முதல் 8கிலோவும் கன்றுகளுக்கு 4 முதல் 5 கிலோவும், ஆடுகளுக்கு 200 முதல் 300 கிராம் வரை எடுக்கலாம்.

ஊறுகாய் புல் தயாரிப்புக்கு உகந்த தீவனப் பயிர்கள்

தானிய வகை	தீவனச் சோளம், மக்காச்சோளம், கம்பு	பால் பிடிக்கும் தருணம்
புல்வகை	கம்பு நேப்பியர், ஒட்டுப் புல் (கோ-4, கோ-5) கினியாப் புல், நீர்ப்புல்	பூக்கும் தருணம்
பயறு வகை	குதிரை மசால், வேலி மசால்	25 முதல் 30% பூக்கும் தருணம்

6. புல் வெட்டும் கருவி (Grass Cutter) அல்லது தீவனப்புல் அறுவடை இயந்திரம் (Brush Cutter)

அனைத்து வகையான தீவன பயிர்களையும் அறுவடை செய்யலாம். (கம்பு நேபியர் புல், கினியா புல், தீவனச் சோளம், வேலி மசால், தீவன மக்காச்சோளம், தீவன தட்டைப்பயறு) வேலையாட்களின் வேலைப்பளுவை குறைக்க உதவுகிறது. ஒரு இயந்திரம் 12 வேலையாட்கள் செய்யும் வேலைக்கு சமமானது. ஒரு மணி நேரத்திற்கு 750 மி.லி முதல் 1000 மி.லி வரை பெட்ரோல் தேவைப் படுகிறது. ஒரு ஏக்கர் தீவனப்பயிர் அறுவடை செய்ய 5-7 மணி நேரம் ஆகிறது. ஒரு ஏக்கர் தீவனப்பயிர் அறுவடை செய்ய ரூ.500/- மட்டுமே செலவு ஆகும். நிலத்திற்கு மேல் உள்ள அனைத்து களைகளையும் கட்டுப்படுத்துகிறது. 2 ஸ்ட்ரோக் மற்றும் 3 ஸ்ட்ரோக் இயந்திரம் பொருத்தப்பட்ட இரண்டு மாதிரிகளால் கிடைக்கிறது.

7. இரு சக்கர பண்ணை வண்டி

புல் வெட்டும் கருவி மூலம் அறுவடை செய்த புற்களை எடுத்துச் செல்ல பயன்படுகிறது. கொள்ளவு என்று எடுத்துக்கொண்டால் 30 முதல் 40 கிலோ எடை கொண்ட புற்களை எடுத்துச் செல்ல பயன்படும்.

8. தீவனப்புல் நறுக்கும் கருவி (Chaff Cutter)

பசுந்தீவனத்தை நன்றாக சிறு துண்டுகளாக புல்வெட்டும் கருவி கொண்டு வெட்டி தீவனமாக கொடுக்க வேண்டும். சிறு துண்டுகளாக புற்களை வெட்டுவதன் மூலம் புல்லின் வெளிப்பரப்பளவு அதிகரிக் கிறது. இதனால் செரிமானத்தன்மையும் 25 சதவீதம் கூடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பசுந்தீவனம் வீணாக்கப்படுவதில்லை.

கால்நடைகள் தண்டுபோல் உள்ள பகுதிகளையும் உட்கொள்ளும் (சேதாரம் 20 சதவீதம் முதல் 30 சதவீதம் குறைகிறது) சேமிப்பதும், கையாள்வதும் எளிதாகும். வேலையாட்களின் வேலைப்பளு குறைகிறது. கறவை மாடு வளர்ப்பில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் கறவை மாடுகளை நன்றாக பராமரிக்க முடியும். பாலின் அளவும் அதிகரிக்கும். எனவே பண்ணை யாளர்கள் கால்நடை வளர்ப்பில் நல்ல லாபம் பெறமுடியும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

தகவல் : ***முனைவர்கள் அ.ஷீபா, பி.என்.ரிச்சர்டு ஜெகதீசன், தா.லூர்து ரீத்தா, மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம், புதுக்கோட்டை.***